*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*25 07 2025 FRIDAY 12.40 PM*
*ஆகாஷ்வாணி*

***தலைப்புச் செய்திகள்***

- *தமிழகத்தில் இரண்டு நாள் பயணமாக நாளை தூத்துக்குடி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி, சுமார் நான்காயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை தொடங்கிவைக்கவுள்ளார்.*
- *குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.*
- *மாநிலங்களவை புதிய உறுப்பினர்களாக தமிழகத்தை சேர்ந்த திரு கமல்ஹாசன், திரு வில்சன், திரு எஸ் ஆர் சிவலிங்கம், திருமதி ராசாத்தி, ஆகியோர் பதவியேற்றுக்கொண்டனர்.*
- *தமிழகத்தில் இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான கலந்தாய்வு வரும் 30-ஆம் தேதி தொடங்கும் என்று மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*
- *அர்ஜெர்டினா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*----இனி விரிவான செய்திகள்---*

*<<<<<<>>>>>*

*தமிழகத்தில் இரண்டு நாள் பயணமாக நாளை தூத்துக்குடி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி, சுமார் நான்காயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை தொடங்கிவைக்கவுள்ளார்.*

*450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையத்தை திறந்துவைக்கும் அவர், தூத்துக்குடி வ உ சி துறைமுகத்தில் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மூன்றாவது வடக்கு சரக்கு முனையத்தையும் திறந்து வைக்க உள்ளார்.*

*தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சார்பில், 200 கோடி ரூபாய் செலவில் ஆறுவழிச்சாலையாக மேம்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி துறைமுகச் சாலையையும் அவர் திறந்துவைக்க உள்ளார்.*

*சேத்தியாத்தோப்பு – சோழபுரம் இடையேயான தேசிய நெடுஞ்சாலையை 2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் நான்குவழிச் சாலையாக விரிவாக்கம் செய்யும் பணிக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.*

*இதேபோன்று, மதுரை – போடிநாயக்கனூர் மின்மயமாக்கப்பட்ட ரயில் பாதை, நாகர்கோவில் டவுன் – கன்னியாகுமரி, ஆரல்வாய்மொழி – நாகர்கோவில் சந்திப்பு, திருநெல்வேலி – மேலப்பாளையம் இடையேயான இரட்டை ரயில் பாதைகளையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார்.*

*<<<<<>>>>>*

*புதிய வருமானவரி மசோதா அனைவரும் புரிந்துகொள்ளும் விதமாக எளிமையான நடைமுறையில் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வரி செலுத்துவோருக்கு உகந்த வகையிலும், அனைத்துத்தரப்பினரும் ஏற்றுகொள்ளக்கூடிய வகையிலும் இந்த மசோதா அமைந்துள்ளது என்றார்.*

*வருமான வரி மேல் முறையீடுகளுக்கு விரைந்து தீர்வு காணவும், கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி வழங்குவதற்கும் புதிய மசோதாவில் வகை செய்யப்பட்டிருப்பதாக திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.*

*<<<<<>>>>>*

*புதிய குடியரசு துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அதிகாரியாக மாநிலங்களவை செயலாளர் திரு பிரமோத் சந்திர மோடியை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.*

*துணை தேர்தல் அதிகாரிகளாக மாநிலங்களவை இணைச்செயலாளர் திருமதி Garima Jain மற்றும் மாநிலங்களவை இயக்குனர் திரு Vijayakumar ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*குடியரசு துணைத்தலைவராக இருந்த திரு ஜெக்தீப் தங்கர் தமது பதவியை ராஜினாமா செய்ததையடுத்து, இப்பதவிக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.*

*<<<<<>>>>>*

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு, நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த ராணுவத்தினருக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பின்னர் அமளியில் ஈடுபட்டதையடுத்து, அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா அவை நடவடிக்கைகளை பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவை இன்று காலை கூடியபோது, தமிழகத்தில் இருந்து புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக-வை சேர்ந்த திரு வில்சன், திரு எஸ் ஆர் சிவலிங்கம், திருமதி ராசாத்தி என்கிற கவிஞர் சல்மா, மக்கள் நீதி மய்யம் தலைவர் திரு கமல்ஹாசன் ஆகியோர் புதிய உறுப்பினர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

*(Voice Byte – கமல்ஹாசன் 33 Sec. )*

அதன் பின்னர் அவையின் வழக்கமான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டபோது நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், கோவா ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் தொகுதி மறுசீரமைப்புக் குறித்த மசோதாவை தாக்கல் செய்தார்.

பின்னர், பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதையடுத்து, மாநிலங்களவை முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<>>>>>

இந்திய துறைமுகங்களின் செயல்திறன் பெருமளவுக்கு மேம்பட்டிருப்பதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் மாநாடு ஒன்றில் பேசிய அவர், சரக்கு கப்பல்கள் துறைமுகங்களுக்கு வந்து செல்வதற்கான காலம் முன்பு நான்கு நாட்களாக இருந்த நிலையில், தற்போது அது ஒரு நாளாக குறைந்துள்ளது என்றார்.

*பெரிய துறைமுகங்களில் சரக்குகளை கையாளும் திறன் 70 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்தார்.*

<<<<<<>>>>>

*இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு மாலத்தீவு சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு மாலே விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*அந்நாட்டு அதிபர் திரு முகமது முய்சூ விமான நிலையத்திற்கு நேரில் வந்து திரு நரேந்திர மோடியை வரவேற்றார்.*

*நாளை மாலத்தீவின் 60-ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் பிரதமர், அதிபர் திரு முகமது முய்சூ-வுடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.*

*மாலத்தீவு அதிபர் கடந்த ஆண்டு இந்தியா வந்தபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் கடல்சார் பாதுகாப்புக்கான விரிவான ஒத்துழைப்பு குறித்த இந்தியா – மாலத்தீவு கூட்டு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் இருதலைவர்களும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.*

*பிரதமரின் இந்த பயணத்தின்போது இந்தியா – மாலத்தீவு இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

<<<<<<>>>>>

*தமிழகத்தில் MBBS மற்றும் BDS படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு வரும் 30-ஆம் தேதி தொடங்கும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் இன்று மாணவர் சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு பேசிய அவர், கலந்தாய்வில் பங்கேற்க போலி ஆவணங்களை சமர்ப்பித்த 25 மாணவர்கள் தகுதிநீக்கம் செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.*

*(Voice Byte - மா. சுப்பிரமணியன் – 48 Sec. )*

<<<<<<>>>>>

*தமிழகத்தில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து, சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் பணியாற்றும் நேர்மையான காவல்துறை அதிகாரிகளை திமுக அரசு பழிவாங்கி வருவதாக கூறினார்.*

*மக்கள் பிரச்சினைக்காகவே மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவை தாம் சந்தித்ததாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.*

*<<<<<>>>>>*

*நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயில் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் சென்னையில் உள்ள ICF தொழிற்சாலையில் ந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*ஆயிரத்து 200 குதிரை சக்தி திறன் கொண்ட ஹைட்ரஜன் ரயிலை இந்திய உருவாக்கி வருவதாகவும். இது ஹைட்ரஜன் சார்ந்த ரயில்வே தொழிநுட்பத்தில் இந்தியாவை முன்னணி நாடாக மாற்றும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.*

*<<<<<>>>>>*

*ராஜஸ்தான் மாநிலம் ஜலாவர் மாவட்டத்தில் பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்ததில் 6 குழந்தைகள் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்துள்ளனர்.*

*அம்மாநிலத்தின் மனோகர் தானா பகுதியில் இயங்கி வரும் இந்த பள்ளி வகுப்பறை ஒன்றின் மேற்கூரை இடிந்து விழுந்ததில், காயமடைந்த மாணவர்கள் ஜலாவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*இவர்களில் 11 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த விபத்து குறித்து குடியரசுத் தலைவர்திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

*<<<<<>>>>>*

## ***விளையாட்டுச் செய்திகள்***

***அர்ஜெர்டினாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.***

***ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-8, 5-11, 11-7, 11-9 என்ற செட் கணக்கில், அர்ஜென்டினாவின் Santiago -வை வென்றார்.***

***இப்போட்டியில் Harmeet Desai, தியா சிட்டேல், Ayhika Mukherjee மற்றும் Payas Jain, Ankur Bhattacharjee இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.***

<<<<<>>>>>

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா மேலும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<<>>>>>